**சுருக்கம்**

பேரிடர் மேலாண்மை – 2016ஆம் ஆண்டில் வடகிழக்கு பருவமழை பொய்த்துவிட்டதன் காரணமாக ஏற்பட்டுள்ள வறட்சி பாதிப்பு – 32 மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவித்தல் மற்றும் வறட்சி நிவாரணம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் [பே.மே–3(1)] துறை**

**அரசாணை (நிலை) எண்.6** நாள்: 10.01.2017

துன்முகி வருடம், மார்கழி 26
திருவள்ளுவர் ஆண்டு 2047
படிக்கவும்:

1. அரசாணை (வாலாயம்) எண்.4104, பொது (சிறப்பு.பி) துறை, நாள் 15.10.2016.
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 03.01.2017 நாளிட்ட செய்தி குறிப்பு
3. அரசாணை (நிலை) எண்.1, வருவாய் [பே.மே.3(1)] துறை நாள் 03.01.2017,
4. மாநில நிவாரண ஆணையர் மற்றும் முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களது கடித எண். (NC.II(1)/7899/2016 நாள் 10.01.2017.
5. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 10.01.2017 நாளிட்ட செய்தி குறிப்பு

••••••

**ஆணை**

தமிழ்நாட்டில் அக்டோபர் 1–ஆம் தேதி முதல் டிசம்பர் 31–ஆம் தேதி வரை வடகிழக்கு பருவமழை காலமாகும். இந்தப் பருவமழை காலத்தில் சராசரியாக 440 மி.மீ மழை கிடைக்கப்பெறும். ஆனால், நடப்பு ஆண்டில் 168.3 மி.மீ மழை மட்டுமே பெய்துள்ளது. மாநிலத்தில் மழை 62 சதவீதம் குறைவாக பெய்துள்ளது. மேலும், 32 மாவட்டங்களிலும் மழை அளவு 35 சதவீதத்தில் இருந்து 81 சதவீதம் வரை குறைவாக பெய்துள்ளது.

2. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் 03.01.2017 அன்று நடத்திய வறட்சி நிலைமை குறித்த ஆய்வுக் கூட்டத்தில் மாநிலம் முழுமையும் நேரடி பயிர் ஆய்வு மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு உத்தரவிட்டார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின் அடிப்படையில் நேரடி பயிராய்வு மேற்கொள்ள வழிமுறைகள் நிர்ணயிக்கப்பட்டன. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மூத்த இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள் கொண்ட குழுக்கள் மாவட்ட வாரியாக ஏற்படுத்தப்பட்டு, மாநிலம் முழுமையும் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வு மேற்பார்வையிட்டு, வறட்சி குறித்த அறிக்கை மற்றும் பரிந்துரைகளை அரசுக்கு அளிக்க ஏதுவாக, மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது. வறட்சியால்

பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் மாவட்ட அளவிலான குழுக்கள் ஆய்வு செய்து 09.01.2017 அன்று அறிக்கையினை அரசுக்கு சமர்ப்பித்தனர்.

3. வறட்சி குறித்த கள ஆய்வின் முடிவில், மொத்தம் 16682 வருவாய் கிராமங்களில், 13305 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 1564 கிராமங்களில் பயிர்நிலை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், 87 விழுக்காடு வரை நிலங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த வறட்சி நிலைமை வருகின்ற மாதங்களில் மேலும் தீவிரமடையும். மேற்குறிப்பிட்ட பாதிப்புகளின் அடிப்படையில் தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவிக்க உத்தரவிடுமாறு, மேலே நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

4. மாவட்ட அளவிலான குழுக்கள் அளித்த அறிக்கைகளின் பேரில் 09.01.2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் விரிவான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. அந்த ஆலோசனைக் கூட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மூத்த அதிகாரிகள் பங்கேற்றனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 10.01.2017 நாளிட்ட அறிவிப்புகளின் அடிப்படையில் பின்வரும் ஆணைகள் வெளியிடப்படுகின்றன:-

1. தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் வடகிழக்கு பருவமழை மிகக் குறைவாக பெய்துள்ளதாலும், மத்திய அரசின் வழிகாட்டி நெறிமுறைபடி வறட்சி பாதித்த மாநிலமாக அறிவிக்க தகுதியுள்ளதாலும், அனைத்து மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவிக்கப்படுகிறது.

2. அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகள் செலுத்த வேண்டிய 1426 ஆம் பசலி ஆண்டுக்குரிய நிலவரி முழுவதும் தள்ளுபடி செய்யப்படுகிறது.

3. வறட்சி காரணமாக விவசாயிகள் தங்கள் கடனை திரும்பச் செலுத்த இயலாது. எனவே, கூட்டுறவு வங்கிகள் மற்றும் வணிக வங்கிகள் ஆகியவற்றில் விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க் கடன் மத்திய காலக் கடனாக மாற்றியமைக்க வழிவகை செய்யப்படும். இவ்வாறு மாற்றியமைப்பதற்கு தேவையான அன்னவாரி சான்றிதழ்கள் விரைந்து வழங்கப்பட நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். கூட்டுறவு வங்கிகள் மூலம் 3,028 கோடி ரூபாய் பயிர்க் கடனாக இந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவு மற்றும் வணிக வங்கிக் கடன்களை மத்தியகாலக் கடனாக மாற்றியமைக்க, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை மூலம் நடவடிக்கை எடுக்க ஆணையிடப்படுகிறது.

4. 27.10.2015 நாளிட்ட வருவாய் [பே.மே.3(2)] துறை, அரசாணை (நிலை) எண்.380–இன்படி 33 சதவீதத்திற்கும் மேல் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ள விவசாயிகளுக்கு, நிவாரண உதவித் தொகை வழங்கப்படும். மேற்படி அரசாணையின் படி இதர பயிர்களுக்கும் உரிய நிவாரணத் தொகை வழங்கப்படும்.

5. புதிய பயிர்க் காப்பீட்டு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு அதிக பயன் கிடைக்கும் என்பதால், அரசுக்கு செலவு அதிகம் என்றாலும், இந்த திட்டம் தமிழ்நாட்டில்

நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளில் சராசரியாக பயிர்க் காப்பீட்டிற்கு அரசின் பங்களிப்பு பிரிமீயம் தொகையாக 40 கோடி ரூபாய் மட்டுமே செலுத்தப்பட்ட நிலையில், இந்த ஆண்டு மாநில அரசின் பங்காக 410 கோடி ரூபாய் **வேளாண்மைத் துறை மூலம்** செலுத்த ஆணையிடப்படுகிறது. இதனால் விவசாயிகள், பயிர் இழப்பினைப் பொறுத்தும், பயிர் வகையினை பொறுத்தும், மாவட்டத்தைப் பொறுத்தும், ரூபாய் 8,000/– முதல் 50,000/– ரூபாய் வரையில் இழப்பீட்டுத் தொகை பெற இயலும்.

6. பயிர்க் காப்பீடு செய்த விவசாயிகள், காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பயிர் இழப்புக்கான இழப்பீட்டுத் தொகையை பெற இயலும். அதற்கான பயிர் அறுவடை பரிசோதனை (Crop cutting experiment) **வேளாண்மைத் துறை மூலமாக** மேற்கொள்ள ஆணையிடப்படுகிறது.

7. வறட்சி காரணமாக ஏற்படும் கால்நடை தீவனப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், **கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை வாயிலாக,** பசுந்தீவனம், அடர்தீவனம் மற்றும் உலர் தீவனம் வழங்க 78 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டங்கள் செயல்படுத்த ஆணையிடப்படுகிறது.

8. வறட்சி காரணமாக வேலை வாய்ப்பின்றி பாதிக்கப்பட்டுள்ள விவசாய தொழிலாளர்களுக்கு, போதிய வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ், 100 நாட்கள் பணி வரம்பு என்பது 150 நாட்களாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும். ஏரிகள் தூர் வாருதல், குளங்கள் சீரமைத்தல் மற்றும் பாசன வாய்க்கால்கள் தூர்வாருதல் போன்ற பணிகள் 3400 கோடி ரூபாய் செலவில் **ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம்** மேற்கொள்ள ஆணையிடப்படுகிறது. இதன்மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கிராமப்புற விவசாயத் தொழிலாளர்கள் வேலைவாய்ப்பு பெறுவர்.

9. வறட்சி காரணமாக கிராமப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், **ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலம்** நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணையிடப்படுகிறது.

10. வறட்சி காரணமாக நகர்ப்புறங்களில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், **நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம்** நீர் ஆதாரங்கள் மற்றும் குடிநீர் விநியோகத்தை மேம்படுத்தும் பணிகள் 160 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்த ஆணையிடப்படுகிறது.

11. வறட்சி காரணமாக வன உயிரினங்கள் பாதிக்கப்படாமல் இருக்க, **வனத் துறை மூலம்** அவற்றுக்குத் தேவையான தீவனம் மற்றும் குடிநீர் ஆதாரத்தைப் பெருக்க 5 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் பணிகள் மேற்கொள்ள ஆணையிடப்படுகிறது.

12. **பொதுப்பணித் துறை மூலமாக** நிலத்தடி நீர்த்தேக்கும் அமைப்பு, நிலத்தடி நீர் செறிவூட்டும் அமைப்பு போன்ற நீராதாரங்களை மேம்படுத்த 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள ஆணையிடப்படுகிறது.

13. கடந்த இரண்டு மாதங்களில் 17 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். விவசாயிகளின் இந்த தற்கொலைகள் பல்வேறு காரணங்களுக்காக ஏற்பட்டிருந்தாலும், இறந்தவர்களின் குடும்ப நலன் கருதி அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 3.00 லட்சம் ரூபாய் வழங்கப்படும்.

5. மேலே பத்தி–4இல் வெளியிடப்பட்டுள்ள ஆணைகளின் அடிப்படையில், மாநில பேரிடர் நிவாரண நிதி விதிமுறைக்குட்பட்டு, துறை தலைவர்கள் உரிய ஒதுக்கீட்டினை பெறும் வகையில், தகுந்த செயற்குறிப்பினை, மாநில நிவாரண ஆணையர் மற்றும் முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் மூலமாக உரிய பரிந்துரையுடன் அரசுக்கு அனுப்பி வைக்கவும் ஆணையிடப்படுகிறது.

6. மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் மேற்கண்ட திட்டத்தினை செயல்படுத்துவதில் ஏற்பட்ட முன்னேற்றம் தொடர்பாக அறிக்கை அனுப்புவதற்கென படிவங்களை வடிவமைத்து அவ்வறிக்கைகளை தொகுத்து அரசுக்கு ஆய்விற்கென அனுப்புமாறு மாநில நிவாரண ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி நியமனம் செய்யப்பட்ட கண்காணிப்பு அதிகாரிகள் பாதிக்கப்பட்ட மாவட்டங்களை மாதத்திற்கு ஒருமுறை ஆய்வு செய்து இவ்வரசாணையில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புகளின் அடிப்படையில் விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவது குறித்து உறுதி செய்ய வேண்டும். இது தொடர்பாக மாதாந்திர அறிக்கையினை பிப்ரவரி 2017 முதல் அரசுக்கு அளிக்க வேண்டும். பரிந்துரைக்கப்படும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தவும் களப் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வுகள் மேற்கொண்டும் நிவாரண திட்டங்கள் வேகமாக நடைபெறவும் ஆவன செய்ய அறிவுறுத்தப்படுகின்றனர்.

8. இவ்வாணை நிதித் துறையின் அ.சாகு.எண். 291A/FS/P நிதி (வருவாய்)/2017, நாள் 10.01.2017–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

டாக்டர் சந்தரமோகன். B,
அரசு செயலாளர்

பெறுநர்
முதன்மைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை – 600 005.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/முதன்மைச் செயலாளர்/
செயலாளர் அனைத்து துறைகள்,
தலைமைச் செயலகம், சென்னை –600 009.
சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாவட்ட கருவூலக அலுவலர்கள்.
மாநில கணக்காயர், சென்னை–600 018.

மாநில கணக்காயர், சென்னை–600 018 (பெயரிடப்பட்ட உரையில்)
மாநில கணக்காயர் (தணிக்கை) , சென்னை –600 018

நகல்

நிதி (வரவு செலவு ஒருங்கிணைப்பு/வரவு செலவு பொது I & II/ வருவாய்) துறை,
சென்னை – 600 009.
இருப்பு கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

10/01/2017

பிரிவு அலுவலர்

10.1.17.